செ.வெ.எண்.32 நாள். 29.4.2020

**பத்திரிக்கை செய்தி**

கோவிட் 19 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு பல்வேறு வங்கிகளின் மூலம் சிறப்பு கடன் உதவித் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும், அதற்கு கீழ்கண்ட தகுதிகள் இருக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தகுதிகள் –**

1. தற்பொழுது பெற்ற கடனை 01.03.2020 வரை முறையாக செலுத்திவரும் குழுக்களாக இருக்க வேண்டும்
2. கடனுக்கான விண்ணப்பிக்கும் குழுக்கள் ஏற்கனவே 2 முறை கடன் பெற்றுள்ள சுய உதவிக்குழுக்களாக இருக்க வேண்டும்.

**கடன் தொகை –**

1. தற்பொழுது வழங்கப்படும் கோவிட் 19க்கான சிறப்பு கடனானது ஒரு உறுப்பினருக்கு குறைந்தது ரூ.5000/– முதல் அதிகபட்சமாக ஒரு குழுவிற்கு ரூ.1,00,000/– வரை வழங்கப்பட வேண்டும்.
2. ஏற்கனவே பெற்றுள்ள கடனின் நிலுவைத் தொகை தற்போது பெறப்படும் கடன் தொகை சேர்த்து ரூ.10.00 லட்சத்திற்கும் மிகாமல் இருக்க வேண்டும்.

**வட்டி விகிதம் –**

7.50 % முதல் 10% வரை (1 year MCLR+SP+RP)

MCLR: Marginal Cost of Lending Rate, SP-: Strategic Premium, RP: Risk Premium

(சம்பந்தப்பட்ட கடன் வழங்கும் வங்கிகளுக்கு ஏற்ப வட்டி விகிதம் மாறுபடலாம்)

**கடன் திரும்ப செலுத்தும் காலம் –**

24 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை (முதல் 6 மாதங்கள் கடன் திருப்பம் இல்லை, 6 மாதம் கழித்து சம தவணைகளில் கட்ட வேண்டும்)

**நிபந்தனைகள் –**

1. குழுவின் தீர்மானம், கோவிட் 19 பாதிப்பினால் ஏற்பட்ட அவசரத்திற்கான கடன் வழங்க கோரும் வகையில், "கோவிட் 19 க்கு கீழ் சிறப்புக் கடன் தொகை பெறுதல் " என குறிப்பிட வேண்டும்.
2. ஒரு குழுவினருக்கு ஏற்கனவே பெற்ற கடன் தொகை மற்றும் தற்போது பெறப்படும் கடன் தொகை சேர்த்து ரூ. 10.00 லட்சத்திற்கும் மிகாமல் இருக்க வேண்டும்.
3. கடன் திருப்பம் இல்லாத 6 மாத காலத்திற்குமான வட்டித் தொகையும் சேர்த்தே வசூலிக்கப்படும்
4. விண்ணப்பிக்க அவகாசம் – BOB(Bank of Baroda), Canara Bank, 31.05.2020 (நீட்டிக்கப்படலாம்), SBI(State Bank of India), IOB(Indian Overseas Bank), 30.06.2020 , PNB(Punjab National Bank): 30.09.2020.

எனவே, மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்ட தகுதிவாய்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களுடைய மகளிர் திட்ட வட்டார மேலாளரை அணுகி சம்பந்தப்பட்ட வங்கிகள் மூலம் வங்கி கடன் பெற்று பயனடையுமாறு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

\\Mathi4\e\Corona\COVID 19 SHG Loan letter.docx